முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை!

அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த

மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 10 திகதி முதல்

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 17 திகதி வரை

(23.04.2023 ஞாயிறு முதல் 30.04.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. அவதார ஞான வள்ளலே
   ஆறுமுகனார் வழிபாடு தன்னை
   அவனியெங்கும் நிகழ்த்தி அருள
   அவதாரம் புரிந்த குருவரங்கனே
2. அரங்கனே உமை போற்றி
   அறிவிப்பேன் இந்தியா தமிழகத்தில்
   வரங்களென சோபகிருது தகர்திங்கள்
   வல்லமைபட தசதிகதி மேல் மூவைபீர் திகதி வரை
3. வரைநடக்கும் வார நிகழ்வாக
   வருங்கால பலன் குறித்த ஆசி
   உரைப்பேன் அகத்திய மகரிஷியும்
   உண்மையான ஞான வாழ்வு தரும்
4. தருகின்ற அரங்கன் அவதாரம்
   தமிழகத்தில் புரிந்து இருக்க
   வருமுலகில் தமிழக ஆளுமை
   வல்லமையான அதிகார வர்க்கங்கள்
5. வர்க்கங்கள் வணங்கி நன்கு
   வடிவேலா முருகா அரங்கா என
   பார்த்துரைக்க எங்கும் முழங்க
   பண்பான அன்னதான சேவை

6. சேவை நெறிஏற்று வருதலுற
செயல்பாடுகள் அனைத்தும் இனி
சேவை குன்றாதபடி பெருகியே
செயல்பாடுகள் முரன்பாடுகள் இல்லாவண்ணம்
7. வண்ணமுடன் தருமமாக மாறி
வளர்ச்சித் திட்டங்களாகவே
எண்ணம் கலந்து ஆளுமைகள்
எல்லாம் நல்வழிக்கு மாறும்
8. மாறுதலாக சுயநலம் விலகி
மக்களின் வரித்தொகை எல்லாம்
ஆறுதலாக பதுக்கல் சுரண்டலின்றி
அம்பலமாகி சேவையாக மாறும்
9. மாறும் மக்களை பாதுகாக்கின்ற
மாண்புள்ள ஞான ஆட்சியாக
ஆறுமுகனார் ஆசிகிட்டிய வண்ணம்
ஆளுமைகள் சிறந்து இனி
10. இனிமாற்றம் இந்தியா தமிழகம்
இலகுவாய் மாற்றம் காணும்
கனி வேலவனை வணங்கி வருக
கட்டாயம் பாதுகாப்பு மிக்க தேசமாகும்

வார ஆசி முற்றே

–சுபம்–

–––––––

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 10ம் நாள் 23.04.2023 ஞாயிற்றுகிழமை முதல் சித்திரை மாதம் 17ம் நாள் 30.04.2023 ஞாயிற்றுகிழமை வரை உள்ள கால நிகழ்வுகள்.

முருகப் பெருமானின் வழிபாடு தான் மக்களை கடைத்தேற்றும் என்றே உலகிற்கு உணர்த்தி முருகப்பெருமான் வழிபாடுகளை உலகமெலாம் பரப்பி உலக மக்கள் வழிபாடுகள் செய்து கடைத்தேறிடவே முருகப்பெருமானின்

அவதாரமாக வந்துதித்த ஞான வள்ளலே ஆறுமுக அரங்க மகா தேசிகரே, குருராசனே உம்மை போற்றியே இந்தியா தமிழகத்தில் சோபகிருது வருடம் சித்திரை மாதம் 10ம் நாள் 23.04.2023 ஞாயிற்றுகிழமை முதல் சித்திரை 17ம் நாள் 30.04.2023 ஞாயிற்று கிழமை வரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

உண்மையான ஞானவாழ்வினை மக்களுக்கு தருகின்ற ஆறுமுக அரங்க மகா தேசிகனார் இக்காலத்திலே தமிழகத்தில் அவதாரமாக அவதரித்திருக்க வரும் காலங்களிலே தமிழகத்தை ஆட்சி புரிகின்ற ஆட்சியரும் அதிகாரிகளும் முருகப்பெருமானை வணங்கி வழிபாடுகளை செய்து முருகா அரங்கா என குருவின் நாமங்களை சொல்லியே நாடெங்கும் பசித்தோர்க்கு அன்னதானங்களை தாராளமாய் செய்து உலக மக்களுக்கு தொண்டுள்ளம் பட செயல்பாடுகளை செய்து வருவதோடு குறைவிலாது அன்னதானத்தை பெருக்கி முரண்பாடுகள் இல்லாத வகையிலே செயல்பட்டு வரவேண்டும்.

தருமத்தின் வழியினால் ஆகிய செயல்பாடுகளை, வளர்ச்சி திட்டங்களை அவரவரும் ஒன்று கூடி கலந்து செயல்படுத்தி வர வர ஆட்சி நன்னெறி ஆட்சியாக மாறிடும்.

ஆதலினாலே அவரவருக்கும் உள்ள சுயநலம் எல்லாம் விலகிடும், நாட்டினில் உள்ள பதுக்கல், சுரண்டல் எல்லாம் விலகி மக்களின் வரிப்பணம் எல்லாம் மக்களுக்கே சென்றடையும் பதுக்கலும் சுரண்டலும் வெளிப்பட்டு அவை மக்களுக்கே சென்றடையும். மக்களைப் பாதுகாக்கின்ற மாண்புமிக்க ஞான ஆட்சியாக முருகப்பெருமானின் ஆசியுடன் மாறிடுமப்பா. ஆட்சியாளர்கள் சிறப்பான அறிவினை பெற்று சிறந்த ஆட்சியை தருவார்கள். ஆதலினால் இந்தியா தமிழகம் வெகு எளிதாக அற்புத மாற்றத்தை காணுமப்பா.

முருகப்பெருமானை வணங்கி வர வர உறுதியாக பாதுகாப்புமிக்க தேசமாக இந்த தேசம் மாறிடுமப்பா எனக்கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–